### திருச்சி – பஞ்சப்பூர் பேருந்து முனையம் திறப்பு!

# ‘திராவிட மாடல்’ அரசு எப்போதும் முன்னோக்கிச் செல்லும்!


## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஜூலை 19 – ‘திராவிட மாடல்’ அரசு எப்போதும் முன்னோக்கிச் செல்வதாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் தெரிவித்துள்ளார்.**

திருச்சி பஞ்சப்பூர் பேருந்து முனையத்தின் வீடியோவை பகிர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில், திருச்சி பஞ்சப்பூரில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் பேருந்து முனையம் மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளதை குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக முழுக்க, முழுக்க குளிர்சாதன வசதிகளுடன் பஞ்சப்பூர் பேருந்து முனையம் உருவாகியுள்ளதாகவும், பஞ்சப்பூர் பேருந்து முனையம் 2 அடுக்குகளைக் கொண்டது, தரைத்தளத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கும் முதல் தளத்திலிருந்து நகர பேருந்துகளும் இயக்கப்படுவதை கூறியுள்ளார்.

இதன்மூலம், ‘திராவிட மாடல்’ எப்போதும் முன்னோக்கிச் செல்வதாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப்பதிவில் பெருமிதம் தெரிவித்துள்ளார்.




# கீழடி அகழாய்வு உண்மையை மூடி மறைக்க ஒன்றிய அரசு முயற்சி!

## தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணா குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, ஜூலை 19 - கீழடி அகழாய்வு உண்மையை மூடி மறைக்க ஒன்றிய அரசு முயற்சிப்பதாக, தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணா குற்றஞ்சாட்டியுள்ளார்.**



தமிழர்களின் பாரம்பரியத்தையும், தொன்மையையும் பறைசாற்றும் வகையில், சிவகங்கை மாவட்டம் கீழடியில் பல்வேறு கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, கீழடியில் நடைபெற்ற மூன்றாம் கட்ட அகழாய்வுகளில் பண்டைய தமிழர்களின் வாழ்க்கை முறை குறித்து ஏராளமான ஆதாரங்கள் கிடைத்தன.

இந்த ஆய்வுகளை மேற்கொண்ட தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணா தலைமையிலான குழுவினர், தங்கள் ஆய்வு முடிவுகளை ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தனர். ஆனால், அறிவியல் பூர்வமாக இல்லை எனக்கூறி இந்த ஆய்வு முடிவுகளை வெளியிட ஒன்றிய அரசு மறுத்து வருகிறது.

இந்நிலையில், தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணா the times of india ஆங்கில நாளிதழுக்கு பேட்டியளித்துள்ளார்.

அதில், தனது 982 பக்க ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மையை மூடி மறைக்க ஒன்றிய அரசு முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஒன்றிய அரசு தனது ஆய்வறிக்கையை திருத்தம் செய்யுமாறு கூறியது குறித்து கேள்விக்கு, “எனது ஆய்வறிக்கையில் ஏதாவது எழுத்துப் பிழைகள் இருந்தால், அதைச் சரிசெய்ய முடியும். ஆனால், ஆய்வறிக்கையில் உள்ள உண்மையை மாற்றினால் நான் குற்றவாளியாகி விடுவேன்” என்று கூறினார்.

கீழடியில் தனது தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட ஆய்வுகள், அமெரிக்காவை சேர்ந்த ஆராய்ச்சி “நிறுவனம் அறிவியல்பூர்வமாக நிரூபித்துள்ளதால், கண்டுபிடிப்புகளை மாற்றங்கள் செய்ய முடியாது என ஒன்றிய அரசிடம் தெளிவாக தெரிவித்து விட்டதாக கூறியுள்ளார்.

‘கீழடி அறிக்கை அறிவியல்பூர்வமாக நிரூபணம் செய்யவில்லை’ என்று ஒன்றிய அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவாத்தின் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்த அமர்நாத் ராமகிருஷ்ணா, முதலில் அவர்



அந்த ஆய்வறிக்கையை படித்து விட்டுப் பேசவேண்டும்” என்று கூறினார்.

கீழடி அகழாய்வு அறிக்கையை நீர்த்துப்போகும் நடவடிக்கைகளில் ஒன்றிய அரசு ஈடுபட்டுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ள அமர்நாத் ராமகிருஷ்ணா, தமிழர்களின் பன்முகத்தன்மை கொண்ட கலாச்சாரத்தை நாட்டு மக்களுக்கு தெரியபடுத்தவேண்டும் என்பதற்காகவே ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக கூறினார்.

ஆனால், அகழாய்வு குறித்து எதுவுமே தெரியாத ஸ்ரீராமன் என்பவர் அளித்த ஆய்வறிக்கையை உண்மை என நம்பும் ஒன்றிய அரசுக்கும் அமர்நாத் ராமகிருஷ்ணா கண்டனம் தெரிவித்தார்.

மௌரியா, ஹர்ஷவர்தன் உள்ளிட்ட வடமாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று ஆய்வுகளை ஏற்கும் ஒன்றிய அரசு, தமிழ்நாடு உள்ளிட்ட நாட்டின் மற்ற பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க மறுப்பது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளார். இந்தியாவின் கலச்சாரம் என்பது பன்முகத்தன்மை கொண்டது என்பதால், இது குறித்து நாட்டு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணா ‘the times of india’ ஆங்கில நாளிதழுக்கு அளித்துள்ள பேட்டியில் வலியுறுத்தியுள்ளார்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# நகராட்சி நிர்வாகம் - குடிநீர் வழங்கல் துறையின் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது!

**சென்னை, ஜூலை 19- தமிழ்நாட்டிலுள்ள 25 மாநகராட்சிகள் 144 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடிப்படை பணிகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (17.7.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் தமிழ்நாட்டிலுள்ள 25 மாநகராட்சிகள் 144 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடிப்படை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு உட்கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை விரைந்து நிறைவேற்றிட அறிவுறுத்தினார்.

குறிப்பாக, மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள் மற்றும் சாலைப் பணிகள் ஆகியவற்றை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நகர்ப்புற உள்ளாட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் விநியோகம், துப்புரவுப் பணி மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்புப் பணிகளை திறம்பட மேற்கொள்ள வேண்டும் என்றும், சட்டமன்ற அறிவிப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். அப்பணிகளை நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் நிறைவேற்றி, பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று அலுவலர்களை அறிவுறுத்தினார்.

கடந்த 4 ஆண்டுகளில் 8 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில் 15 ஆயிரம் கிலோமீட்டருக்கும் அதிகமான சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டுள்ளதையும், கடந்த 4 ஆண்டுகளில் நகர்ப்புற மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய பல்வேறு உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளான மெட்ரோ இரயில் திட்டங்கள், புதிய குடிநீர்த் திட்டங்கள், மழைநீர் வடிகால் பணிகள் போன்ற பல்வேறு முக்கிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாநகராட்சிகளில் 3,199 பணிகளும், நகராட்சிகளில் 4,972 பணிகளும் தொடங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அப்போது முதலமைச்சர் அவர்கள், இப்பணிகள் அனைத்தையும் விரைவில் தொடங்கி, வடகிழக்குப் பருவ மழைக் காலத்துக்கு முன்பே முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதேபோன்று, இறுதிக்கட்டத்தில் இருக்கின்ற பணிகள், பாதி முடிவுற்ற பணிகளையெல்லாம் போர்க்கால அடிப்படையில செய்து முடித்திட, மின் வாரியம், குடிநீர் வழங்கல் வாரியம், நெடுஞ்சாலைகள் துறை, மாநகராட்சி நிர்வாகங்கள் ஒருங்கிணைப்புடன் செயல்பட வேண்டியது மிகவும் அவசியம் என்று குறிப்பிட்டார்.

பருவமழைக் காலம் தொடங்குவதற்கு முன்பே மழைநீர் வடிகால்கள் சுத்தம் செய்யப்பட்டு தண்ணீர் வெளியேற வழி ஏற்படுத்த வேண்டும் என்றும், குறிப்பாகத் தாழ்வான பகுதிகள், வெள்ள அபாயம் இருக்கின்ற பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, முதலில் அங்கு பணிகளை முடிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மாநகராட்சி ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.